தமிழகச் சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் நட்சத்திரக் குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : பேரவையின் முதல் அலுவல் கேள்வி பதில். மதிப்பிற்குரிய அமைச்சர்கள் பதில் சொல்வதற்குக் கேள்விகள் இல்லை.

1. அறிவிப்பு.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—அனுமதித்தல் குறித்த நடைமுறை.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : ஒரு சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் (Adjournment Motions) என்னிடம் கொடுக்கப் பட்டுள்ளன. அவைகளைப்பற்றி என்னுடைய அறிவிப்பு ஒன்று உள்ளது. சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கொண்டு வருகிற தீர்மானங்களை அனுமதிப்பதா இல்லையா என்பதைப் பொறுப்புணர்ச்சியோடு கவனிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். அவையின் நடவடிக்கைகளைத் தள்ளி வைக்க வேண்டுமென்ற தீர்மானங்கள் அவையின் அன்றாட நடவடிக்கை களைப் பாதிக்கக்கூடியவை. ஆகையால், மிக முக்கியமானவை என்று கருதி, இப்படிப்பட்ட தீர்மானங்களையொட்டி நடைமுறை (Procedure) இன்னது என்று வரையறுக்க மன்ற உறுப்பினர் களின் முதல்வர் அவர்கள் (Leader of the House) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (Leader of the Opposition) ஆகியோருடன் கலந்து ஆலோசித்து நான் எடுத்த முடிவுகளைத் தெரிவிக்கிறேன்.

43-வது விதிக்கிணங்க ஒத்திவைப்புத் தீர்மானத்தை கொண்டு வருகிற மதிப்பிற்குரிய உறுப்பினர், தீர்மானத்தை அவைக்குக் கொண்டு வருவதற்கு முன்னால் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றாக வேண்டும். பேரவைத் தலைவரை அவருடைய அறையில் சந்தித்து, தீர்மானத்திற்கு அனுமதி பெறுவது பற்றி விவாதிக்கப் போதிய வாய்ப்புக் கொடுக்கப்படும்.

அதன் பின் 45-வது விதிப்படி தீர்மானத்தின் வாசகத்தைச் பேரவைத் தலைவர் இந்த அவையில் படித்துத் தீர்மானம் அனுமதிக் கப்பட்டுள்ளதா இல்லையா என்ற தீர்ப்பைத் தெரியப்படுத்துவார்.

அதைப் பற்றிய விவாதம் எதுவும் இந்த அவையில் நடைபெறாது. விதிகளுக்கிணங்க, மன்ற முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒப்புதலுடன் ஒத்தி வைப்புத் தீர்மானத்தையொட்டிய இந்த நடைமுறை (Procedure) செயலாக்கப்படும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் அறிவித்துக் கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) வருஷநாடு மலைப்பிரதேசத்தில் விவசாயிகள் வெளியேற்றப்படுதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய வாசகத்தை நான் அப்படியே படிக்க வேண்டுமென்று இப்போது நடைமுறை தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

"மதுரை மாவட்டத்தில் வருஷநாடு மலைப் பிரதேசத்தில் 14 கிராமங்களில் போலீசாரும், வன இலாகா அதிகாரிகளும் பலவந்தமாக விவசாயிகளைக் கிராமங்களை விட்டு வெளியேற்றுகின்றனர். சொந்த உழைப்பின் மூலம் பண்படுத்தி, நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து பல ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் அரசினர் தலையிட்டு உடனே வெளியேற்றுகின்ற நடவடிக்கைகளைத் தடை செய்யவேண்டும்" என்று கோரி தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இதைப் பற்றிய என்னுடைய தீர்ப்பு—

இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது. ஆகவே, விதிகளின்படி இதற்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது. மேலும், இதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் விவாதிக்க வாய்ப்பு இருக்கிறது. கவர்னர் உரையின்மீது பேசும்போது இதைப் பற்றிக் குறிப்பிடலாம். ஆகவே, பேரவைத் தலைவருடைய அனுமதி இந்தத் தீர்மானத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்று அறிவிக்கிறேன்.

(இ) இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய கோப்புகள் திடீரென்று மறைதல்.

MR. SPEAKER : Now, let us take up the notice of Adjournment Motion given by hon. Member Dr. H. V. Hande. The notice reads as follows :—

"I wish to adjourn the business of this House to discuss a matter of urgent public importance, namely, the sudden missing of a few files immediately after the announcement of the election results and before the present Ministry assumed office. The files are mostly connected with the anti-Hindi agitation that took place in 1965."